# கட்டப்பொம்மன் நகர் தேவாலயப் பிரசங்கக் கதைகள்

***தா. கிருபா வெள்ளையம்மாள்***
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை
சாராள் தக்கர் கல்லூரி, பெருமாள்புரம்

**மலர்: 11**

**சிறப்பிதழ்: 2**

**மாதம்: ஜூலை**

**வருடம்: 2023**

**P-ISSN: 2321-788X**

**E-ISSN: 2582-0397**

**DOI:**
https://doi.org/10.34293/sijash.v11iS2i1-July.6395

***ஆய்வுச் சுருக்கம்***

*தேவ செய்தியின் போதனைகளுக்குத் தக்கதாக உதாரணக் கதைகளைக் கூறி விளக்குவது அவசியமாகும். பல தேவ வசனங்கள் மூலம் விளக்கும் செய்தியை ஒரு சிறு கதை ஒரு நொடியில் இதயத்தைத் தாக்கி உணர வைக்கின்றன. இயேசு கிறித்து கூட பல உவமை கதைகள் வாயிலாக போதித்து இருப்பதை விவிலியத்தில் காணலாம். பிரசங்கக் கதைகள் கேட்கும் சத்தியத்தை மனதில் இருத்த கூடியதாக அமைகின்றன. இக்கதைகளின் கரு இரக்கம்இ அன்புஇ ஒற்றுமை போன்றவற்றை உள்ளடக்கியதாக இருக்கின்றன*

***கலைச் சொற்கள்:*** *பிரசங்கம், தேவாலயம், கதை, தேவசெய்தி, சிலுவை*

## முன்னுரை

தேவாலயங்களில் பிரசங்ககளின் ஊடாக கதைகள் கூறப்படுகின்றன. தேவ செய்தியை விளங்க வைப்பதற்காக கதைகள் கூறப்படுவதைக் காணலாம். சத்தியத்தை தெளி வாக புரிய வைப்பதே இதன் நோக்கமாகும். அவ்வகையில் பாளையங்கோட்டை கட்டப்பொம்மன் நகர் தேவாலயத்தில் பிரசங்கத்தின் ஊடாக கூறப்பட்ட கதையை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்

## அன்பு

அன்பு இல்லாமல் மனிதன் மனிதனாக இருக்க முடியாது. அன்பு தான் மனிதநேயத்தின் அடிப்படை. “வாழ்வின் உண்மையான பொருள் அன்பு செலுத்துவதிலும் அன்பு செலுத்தப்படுவதிலுமே பொதிந்துள்ளது என்பார் அன்னை தெரசா. இன்று உலகம் அன்பு என்ற சொல்லின் உண்மையான பொருளை மறந்துவிட்டது. அன்பு தவறாக பயன்படுத்தப்பட்டு அன்பைக்கண்டு பயப்படும் நிலைக்கு மனிதன் தள்ளப்பட்டுள்ளான். அகத்தில் அன்பு இல்லாத வாழ்க்கை பாலைவனத்தில் அன்பு துளிர்வதைப் போன்றது. விவிலியம் உன்னிடத்தில் நீ அன்பு கூறுவது போல பிறரிடத்திலும் அன்பு கூறுவாயாக என்று கற்பிக்கிறது. இதனையே நமக்கு மாதிரியாக இயேசு கிறித்து செய்து காட்டினார். சிலுவையில் அறையபட்ட போது கூட பிறரை மன்னித்தார். தன்னோடு கூட சிலுவையில் அறையப்பட்ட கள்ளனிடம் அன்பு காட்டினார்.

டாம் நிக்கோலஸ் என்பவர் காசநோயினால் பீடிக்கப்பட்டவர்கள் மத்திலே தேவப் பணியைச் செய்து கொண்டிருந்தார். அந்த மருத்துவமனையின் காசநோய் பிரிவில் ஒரு மனிதர் இருந்தார். எப்போதும் இருமி கொண்டேயிருப்பார். படுக்கையிலேயே சிறுநீர் கழித்து விடுவார். எனவே அவரை எல்லாரும் வெறுப்பார்கள். இதனை கண்ட டாம் நிக்கோலஸ் அவரை கழிவறைக்கு அழைத்துச் சென்றார். டாம் நிக்கோலஸின் இந்த செயலைக் கண்டவர்கள் தேவனுடைய அன்பினால் பிணைக்கப்பட்டார்கள். தேவன் இப்படிப்பட்ட அன்பை நம்மிடம் காட்டினார். நாமும் இப்படிப்பட்ட தேவ அன்பை பிறரிடம் காட்ட வேண்டும் என்று நம்மிடம் எதிர்'பார்க்கின்றார்.

## ஐக்கியம்

ஐக்கியம் "கொய்னோனியா" என்னும் கிரேக்க வார்த்தையிலிருந்து பிறந்ததாகும். இதின் பொருள் "பொதுவாக பகிர்ந்து கொள்ளுதல்" என்பதாகும். பிதாவாகிய தேவன் குமாரனிடத்திலும் குமாரன் பிதாவினிடத்திலும் ஐக்கியம் உள்ளவர்களாயும் பிரிக்க முடியாத உறவு உள்ளவர்களைப் போல் ஒன்றாயிருப்பது போல நாமும் ஒன்றாய் இருக்கவேண்டும் என இயேசு கிறித்து விரும்புகின்றார். அதே உறவிலும் ஐக்கியத்திலும் பங்கு கொள்ளும்படி நமக்கும் அழைப்புக்கொடுக்கப்பட்டிருக்கிறது.

வயிறைப் பார்த்து மற்ற உறுப்புகள் நீ ஒரு வேலையும் செய்றது இல்லை. நன்றாக சாப்பிடுகின்றாய். இனி நாங்கள் ஒரு வேலையும் செய்ய மாட்டோம். என மற்ற உறுப்புகள் வேலை நிறுத்தம் செய்தன. ஓரிரு நாள் செல்ல மற்ற உறுப்புகள் எல்லாம் சோர்வுறத் தொடங்கின. நாம் வேலை செய்யவில்லையெனில் சோர்ந்து விடுவோம். நமக்கான ஊட்டசத்தை வயிறு தரவில்லையெனில் நாம் செயல்பட முடியாது என்பதை உணர்ந்து பணியைத் தொடங்கின. ஐக்கியம் உடைப்படும் போது ஒரு சரீரம் முழுவதும் சோர்வுறுகிறது. இதே போல தான் தேவன் நம் மத்திலேயும் சபையின் மத்திலேயும் ஐக்கியத்தை விரும்புகின்றார்.

கால் தடுக்கி விழுந்து அடிபட்டால் அத்தனை உறுப்புகளும் வருத்தமடைந்து தடவி கொடுத்து ஆறுதல் கூறும். கண் கண்ணீர் விடும். காலுக்கு அடிபட்டால் எனக்கு என்ன? என எந்த உறுப்பும் இருக்காது. அதே போன்ற ஐக்கியத்தை ஒற்றுமையை நம்மிடமும் கடவுள் எதிர்பார்க்கின்றார்.

## நமக்காக எல்லாவற்றையும் செய்து முடிப்பவர்

ஒரு பெரிய கப்பல் ஒன்று உலகம் முழுவதும் பிரயாணப்படுவதற்கு தயாரானது. அதில் பயணப்படுவதற்காக அநேகர் கடன் வாங்கி பயணப்பட தயாரானார்கள். ஒரு குடும்பம் இதே போல் கடன் வாங்கி பயணப்பட கப்பலில் ஏறியது. சாப்பிடகூட பணம் இல்லாததால் சாப்பிடாமல் பயணப்பட்டன. இரண்டு நாட்கள் சென்ற பின்பு தான் தெரிந்தது. அளவு இல்லாத சாப்பாட்டிற்கும் சேர்த்துத்தான் பணம் வாங்கியுள்ளனர் என்று. இப்படி தான் கடவுள் நமக்காக எல்லாவற்றையும் இந்த உலகத்தில் செய்து முடித்திருக்கிறார். நாம் அதை உணராதவர்களாக எல்லாவற்றையும் குறித்துக் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறோம்.

## பரிசுத்தம்

பரிசுத்தமற்ற உலகத்தில் பரிசுத்தமற்ற மனிதனை எடுத்து அவனை பரிசுத்தப்படுத்தி பரிசுத்தமற்ற உலகத்தில் வைத்து பரிசுத்தமாய் காக்கிறாரே என்பார் ராபர்ட் மொராக். அதே போல தான் தேவன் நம்மை பரிசுத்தத்துக்கு அழைத்து இருக்கிறார். கடலில் மீன் இருந்தாலும் உப்பை எடுக்காததுப் போல மனிதன் பாவம் நிறைந்த உலகத்தில்

இருந்தாலும் பாவத்தை எடுக்காதிருக்கவேண்டும். ஆல்டர் மேசை மற்றும் ஆலயத்தியுள்ள பிற மேசைக்களுக்கும் பெரிய வித்தியாசம் உள்ளது. ஆலயத்திலுள்ள பிற மேசைகளை எல்லா இடத்துக்கும் எடுத்துச் செல்வோம். அதின்மேல் எல்லாவற்றையும் வைப்போம். ஆல்டர் மேசையை எல்லா இடத்துக்கும் எடுத்துச் செல்ல மாட்டோம். அதின் மேல் தேவையில்லாதவற்றைவைக்கமாட்டோம். அதை பரிசுத்தமான காரியத்தை வைக்க மட்டுமே பயன்படுத்துவோம். அதே போல தான் தேவன் நம்மை பரிசுத்ததிற்கு என்று பிரித்தெடுத்துயிருக்கிறார். தேவனுக்காக பரிசுத்தப்படுத்தப்பட்டிருக்கிறோம். எனவே பரிசுத்தமான காரியங்களை மட்டுமே செய்யவேண்டும்.

**உண்மை**

விவசாயி ஒருவர் அரை கிலோ வெண்ணெய் எடுத்துகொண்டு போய் பேக்கரி கடைகாரரிடம் கொடுத்துவிட்டு அரை கிலோ பிரட் வாங்கி கொண்டு செல்வார். ஒரு நாள் பேக்கரி கடைகாரர் விவசாயிடம் நீ குறைவாக வெண்ணெய் தருகின்றாய் என சண்டையிடுகின்றார். விவசாயி தான் சரியாக அளந்து தருவதாக கூறினார். அதை கேட்காது பேக்கரி கடைகாரர் நீதிமன்றத்தை நாடினார். நீதிபதி விவசாயிடம் சரமாரியாக கேள்வி கேட்கின்றார். நீ கள்ள தராசு வைத்திருக்கின்றாய் என குற்றம் சாற்றுகின்றார். விவசாயி ஐயா என்னிடம் தராசே இல்லை. நான் இவரிடம் தினமும் பிரட் வாங்கி செல்வேன். அதில் அரைகிலோ என்று எழுதபட்டிருக்கும். அந்த பிரட்டை வைத்துத்தான் நான் வெண்ணையை எடை போட்டு கொண்டு செல்வேன் என்றதும் பேக்கரி கடைகாரர் தலைகுனிந்தார். நீதிபதி பேக்கரி கடைகாரருக்கு தண்டனைக் கொடுத்தார். கொஞ்சத்தில் உண்மையாய் இருந்தால் உன்னை அநேகத்தின் மேல் அதிகாரியாக வைப்பேன் என்று விவிலியம் கூறுவது போல பணி புரியும் இடத்தில் உண்மையாய் பணிபுரிய வேண்டும்.

**ஞானஸ்நானம்**

ஆப்பிரிக்க தேசத்தில் முதன்முறையாக ஞானஸ்நானம் கொடுக்கும் போது ஒரு இரும்பு குச்சி ஒன்று போதகரை குத்தி காயப்படுத்திவிட்டது. அதே போலவே ஒவ்வொரு முறையும் ஞானஸ்நானம் கொடுக்கும் போதும் போதகர்கள் அக்குச்சினால் காயப்படுத்திவிட்டு ஞானஸ்நானம் கொடுப்பது தொடர்ந்தது. ஆத்துமாவை கடவுளுக்கு நேராக நடத்தும் ஞாஸ்நானம் முக்கியமா? குச்சியால் காயப்படுத்துவது முக்கியமா? என்பதே தெரியாது ஞானஸ்நானம் கொடுத்து வந்துள்ளதை காணமுடிகின்றது.

பரிசு முக்கியமா? பரிசு பொருளைச் சுற்றிய காகிதம் முக்கியமா? பரிசு தான் முக்கியம். அதே போல தான் தெளி ப்பு ஞானஸ்நானஸ்நானமோ அல்லது முழுக்கு ஞானஸ்நானமோ எதுவாக இருப்பினும் ஆண்டவர் அழைப்பை ஏற்று இரட்சிப்பு என்னும் பேழைக்குள் நுழைவதே முக்கியமானது. ஆரோன் சிரசின் மேல் ஊற்றப்பட்ட தைலமானது அவன் உடல் முழுவதும் இறங்கி நறுமணம் தந்தது போல ஞானஸ்நானம் பெற்று தேவனுடைய அன்பு நம்முடைய வாழ்வில் காணப்படும் போது நம்முடைய செயல் மற்றும் நடக்கையின் மூலமாக நறுமணம் வீசுவோம்.

**பேசும் விதம்**

ஒரு மனிதரை இராஜ அரண்மனையிலே தேடிகொண்டிருந்தனர். அந்த வழியாக பார்வையற்ற துறவி ஒருவர் வந்தார். அவரிடம் போர்வீரன் ஒருவன் கிழவா இந்த வழியாக யாராவது போவதைப் பாத்தீர்களா? என கேட்டார். இரண்டாவதாக தளபதி துறவிடம் பெரியவரே இந்த வழியாக யாராவது சென்றார்களா? என கேட்டார். மூன்றாவதாக அரசன் துறவிடம் அன்பான துறவியாரே இந்த வழியாக யாராவது சென்றார்களா? என கேட்டார். அந்த துறவியார் வணக்கம் மன்னா என

பணிந்தார். ஒருவருடைய பேச்சிலே ஒருவரை அடையாளம் கண்டுகொள்ள முடியும். பேசும் வார்த்தைகளுக்கு அதிக சக்தி இருக்கிறது. விவிலியம் கூறுவது போல இருதயத்தின் நிறைவையே வாய் பேசும். ஒருவருடைய பேச்சு அவருடைய உணர்ச்சிகளையும் எண்ணங்களையும் வெளிப்படுத்துவதால் வார்த்தைகளை ஆராய்வது அவசியமாகின்றது.

### மாற்றம்

போதகர் ஒருவர் மாற்றம் வேண்டும் என்ற தலைப்பில் எந்த வசனம் எடுத்து பிரசங்கம் பண்ணுவது என சிந்திக்கும்போது பையன் அவரை விளையாட அழைத்தான். போதகர் உலக வரைபடத்தை கிழித்து பையனிடம் கொடுத்து ஒழுங்கு பண்ணசொன்னார். பையன் 5 நிமிடத்தில் உலக வரைபடத்தைச் சரிசெய்துவிட்டான். எப்படி இவ்வளவு விரைவாக முடித்தாய் என கேட்டபோது பின்னால் உள்ள உருவத்தைச் சரிசெய்தேன். உலக வரைபடம் வந்துவிட்டது என கூறினான். ஒரு மனிதன் சீர்திருந்தினால் திருச்சபை சீராகும். திருச்சபை சீரானால் திருமண்டலம் சீராகும். திருமண்டலம் சீரானால் தமிழ்நாடு சீராகும். தமிழ்நாடு சீரானால் இந்தியா சீராகும். இந்தியா சீரானால் உலகம் சீராகும்.

### பாடு அனுபவித்தல்

மேகலாயாவில் ஒரு கிறித்தவ குடும்பம் இருந்தது. அக்குடும்பத்திடம் ஒரு கூட்டத்தார் இயேசு கிறித்துவை மறுதலிக்கவேண்டும். இல்லையெனில் உன் இரு பிள்ளைகளையும் கொன்று விடுவோம் என கூறினர். மறுதலிக்கவில்லை. இரு பிள்ளைகளையும் கொலை செய்தனர். இன்னும் நீ மறுதலிக்கவில்லையெனில் உன் மனைவியைக் கொலை செய்வோம் என கூறினர். மறுதலிக்க மறுக்கவே அவரது மனைவியைக் கொலை செய்தனர். பின்னர் உன்னையும் கொலை செய்து விடுவோம் என மிரட்டினர். வுழ கழடட ழுற துநளரள என்ற பாடலை பாடிகொண்டேயிருந்தார். அவரையும் கொலை செய்தனர். பரலோக ராஜ்ஜியத்திற்கு செல்லவேண்டும் என்றால் கிறித்துவுக்காக பாடு அனுபவிக்கவேண்டும். கலப்பையின் மேல் கை வைத்துவிட்டுத் திரும்பி பார்க்க கூடாது. பாடுகளை எற்றுக் கொண்டு அவருடைய சீடராக இருக்கவேண்டும்.

### முடிவுரை

தேவாலயங்களில் பிரசங்கிக்கப்படும் கதைகள் வெறும் வேடிக்கைக்காக சொல்லப்படுவது அல்ல. நல்ல நிலத்தில் விழுந்த விதையைப் போல பத்தும் நூறுமாக பலன் தர போதிக்கப்படுகிறது.